**செப்டம்பர் – 25**

# TNPSC துளிகள்

- இந்திய கடற்படையின் முதல் தலைமுறை ஏறிகணை கப்பலின் (Next Generation Missile Vessel - NGMV) அடித்தளம் கொச்சியில் உள்ள கொச்சி ஷிப்யார்ட் லிமிடெட் (CSL) நிறுவனத்தில் நாட்டப் பட்டது.
- ஆந்திரப் பிரதேசத்தின் நாயுடுபேட்டையில் இந்தியாவின் மிகப்பெரிய 7 GW N-வகை TOPCon (Tunnel Oxide Passivated Contact) சூரிய மின்கல வசதியை பிரீமியர் எனர்ஜிஸ் நிறுவனம் அமைத்துள்ளதன் மூலம் அதன் மொத்த சூரிய மின்கல உற்பத்தி திறன் 10.6 GW ஆக உயர்ந்துள்ளது என்ற நிலையில் இது இந்தியாவில் மிக அதிகபட்சமாகும்.
- மத்தியப் பிரதேசத்தின் குவாலியர் ஆசியாவின் முதல் தொலைத்தொடர்பு உற்பத்தி மண்டலத்தை (TMZ) சுமார் ரூ.5,500 கோடி மதிப்பீட்டில் அமைக்க உள்ளது.
- அசாம் மாநிலம் கவுகாத்தி அருகே உள்ள சந்திராபூரில் NETRA (விண்வெளிப் பொருட்கள் கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்விற்கான வலைப்பின்னல்) திட்டத்தின் கீழ் இஸ்ரோவின் மேம்பட்ட ரேடார் ஆராய்ச்சி மையத்திற்கான அடிக்கல் நாட்டப் பட்டது.
- 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 அன்று கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MoU) கீழ் டெல்லியின் 160 ஆண்டுகள் பழமையான சாந்தினி சௌக் டவுன் ஹால் வளாகம் உலகளாவிய பாரம்பரிய மையமாக மறுவடிவமைப்பு செய்யப்பட உள்ளது.
- இந்தியாவின் முதல் அங்கீகரிக்கப்பட்ட டெங்கு தடுப்பூசியான 'கியூடெங்கா' (Qdenga), 4 முதல் 60 வயதுடையவர்களுக்காக 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பின் (CDSCO) ஒப்புதலைப் பெற்றதுடன் 2027 ஆம் ஆண்டின் முதல் பாதியில் தனியார் சந்தையில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ஆந்திரப் பிரதேசத்தின் கர்னூலில் உள்ள தேசிய திறந்தவெளி தளத்தில் (NOAR) காட்சிப் படுத்தப் பட்ட ஒருங்கிணைந்த ஆளில்லா விமானம் கண்டறிதல் மற்றும் தடுப்பு அமைப்பின் (IDD&IS) Mk-II(A) கீழ் 5 கி.மீ வரையிலான ஆளில்லா விமானங்கள் மற்றும் கண்காணிப்பு உணரிகளை எதிர்கொள்ளும் வகையில் 30 கிலோவாட் (kW) இயக்கப்பட்ட ஆற்றல் ஆயுதத்தை (DEW) DRDO உருவாக்கி வருகிறது.
- வடகிழக்கு இந்தியாவின் மிகப்பெரிய மின் நிலையமான அதானி பவர் நிறுவனத்தின் ரூ.48,000 கோடி மதிப்பிலான, 3,200 மெகாவாட் அதி-சிறப்பு அனல் மின் நிலையத்திற்கு அசாம் மாநிலம் துப்ரியில் உள்ள சாப்பரில் அடிக்கல் நாட்டப்பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு மாநில உடல் உறுப்பு தான தினம் 2026

- தமிழ்நாடு மாநில உடல் உறுப்பு தான தினம் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 அன்று அனுசரிக்கப்பட்டது. மேலும் 2008 ஆம் ஆண்டில் மாநிலத்தின் உடல் உறுப்பு தானத் திட்டத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்த ஹிதேந்திரனின் உடல் உறுப்பு தானத்தை நினைவுகூரும் வகையில் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.
- உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், தானம் செய்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரைக் கௌரவிப்பதும் இந்நாளின் நோக்கமாகும்.
- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை, தமிழ்நாட்டில் 312 பேர் உடல் உறுப்பு தானம் செய்துள்ளனர். மேலும், தானங்கள் மூலம் 1,699 உடல்

உறுப்புகள் மற்றும் திசுக்கள் பெறப்பட்டுள்ளன.

- 2008 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் வரை, மாநிலத்தின் உடல் உறுப்பு தானத் திட்டத்தின் மூலம் 2,550 கொடையாளர்களிடமிருந்து 14,845 உடல் உறுப்புகள் மற்றும் திசுக்கள் பெறப்பட்டுள்ளன.
- மாநிலத்தில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையை முறைப்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் தமிழ்நாடு உடல் உறுப்பு மாற்று ஆணையம் (TRANSTAN) 2015 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது; இத்திட்டம் 2008 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- தேசிய உடல் உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பின் (NOTTO) தரவுகளின்படி, இந்திய மாநிலங்களில் 2025 ஆம் ஆண்டில் இறந்த உடல் உறுப்பு தானம் செய்தவர்களின் அதிக எண்ணிக்கையை தமிழ்நாடு பதிவு செய்துள்ளதுடன் மேலும் 2,796 உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல், மூளைச்சாவு அடைந்து உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு மாநில அரசு அரசு மரியாதையும் வழங்கி வருகிறது; 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் வரை 825 கொடையாளர்கள் இத்தகைய மரியாதையைப் பெற்று உள்ளனர்.




# தேசியச் செய்திகள்

## 11வது ஆயுர்வேத தினம் 2026

- ஆயுர்வேதம் மற்றும் உடல்நலம் மற்றும் ஆரோக்கியத்தில் அதன் பங்கு குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக 11-வது ஆயுர்வேத தினம் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 அன்று அனுசரிக்கப்பட்டது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Ayurveda for a Healthier Tomorrow என்பதாகும்.
- ஆயுர்வேத தினம் முதன்முதலில் 2016 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டில் அரசாணை மூலம் அரசிதழில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 2026 ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 23 அன்று ஆயுர்வேத தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 2026 ஆம் ஆண்டு கொண்டாட்டமானது நிர்ணயிக்கப்பட்ட தேதியில் நடைபெற்ற முதல் ஆயுர்வேத தினமாகும்; முன்னதாக, இது தன்வந்திரி ஜெயந்தி (Dhanteras) அன்று

அனுசரிக்கப்பட்டதால், ஒவ்வொரு ஆண்டும் தேதி மாறியது.

- ஆயுஷ் அமைச்சகம் சுகாதார சேவைகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், கல்வி, தரத் தர நிலைகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் ஆயுர்வேதத்தை நன்கு மேம்படுத்துகிறது.




## தேர்தல் ஆணையத்தின் மீதான அரசியல் சாசன அமர்வு




- தலைமை தேர்தல் ஆணையர் (CEC) மற்றும் தேர்தல் ஆணையர்கள் (ECs) நியமனத்தை நிர்வகிக்கும் சட்டத்திற்கு எதிரான சவாலை உச்ச நீதிமன்றம் ஒரு பெரிய அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றியுள்ளது.
- தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் (நியமனம், பணி

நிலைமைகள் மற்றும் பதவிக்காலம்) சட்டம், 2023 அதன் நியமன நடைமுறை குறித்து சவால் செய்யப்பட்டுள்ளது.

- 2023 ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் உள்ள தேர்வுக் குழுவில் பிரதமர், மத்திய அமைச்சரவை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் உள்ளனர், இது அரசாங்கத்திற்கு 2:1 என்ற பெரும்பான்மையை அளிக்கிறது.
- பிரதமர், இந்தியத் தலைமை நீதிபதி (CJI) மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரை உள்ளடக்கிய முந்தைய உச்ச நீதிமன்ற ஏற்பாட்டிற்குப் பதிலாக இந்தச் சட்டம் கொண்டு வர ப்பட்டது.
- இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்த வழக்கை மாற்றுவது குறித்து மாறுபட்ட தீர்ப்பை வழங்கியது ஆனால் பின்னர் ஒரு அரசியல் சாசன அமர்வு இந்த பிரச்சினையை முடிவு செய்ய வேண்டும் என்று ஒப்புக் கொண்டது.
- இந்த வழக்கு 2015 ஆம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ளதாகவும், இது தேர்தல் ஆணையத்தின் நியமனம் மற்றும் சுதந்திரம் தொடர்பானது என்றும் உச்ச நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது.

## கொலீஜியம்/நீதிபதிகள் தேர்வுக் குழு குறித்து உச்ச நீதிமன்றம்




- தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பான சட்டத்திற்கு எதிரான சவாலை விசாரிக்கும் போது உச்ச நீதிமன்றம் கொலீஜியம்/நீதிபதிகள் தேர்வுக் குழு அமைப்பை ஆதரித்தது.
- தேர்தல் ஆணையர் தேர்வு செயல்முறையுடன் கொலீஜியத்தை/நீதிபதிகள் தேர்வுக் குழுவை மத்திய அரசு ஒப்பிடுவது "கவலைக்குரியது" என்று நீதிபதி தீபங்கர் தத்தா தெரிவித்தார்.
- நீதித்துறை நியமனங்களில் நிர்வாகத் துறைக்கு பங்கு இருப்பதாகவும், கொலீஜியத்தின்/நீதிபதிகள் தேர்வுக் குழுவின் பரிந்துரைகளை ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.
- கொலீஜியம்/நீதிபதிகள் தேர்வுக் குழு பரிந்துரைத்த பெயர்களில் சிலவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து மத்திய அரசு ஒப்புதல் அளிப்பது குறித்தும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.
- கொலீஜியம்/நீதிபதிகள் தேர்வுக் குழு என்பது மூத்த நீதிபதிகள் உயர்

நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமிக்கவும் இடமாற்றம் செய்யவும் பரிந்துரை செய்யும் அமைப்பாகும்.

### ஸ்வச் சாகர் சுரக்சித் சாகர் 5.0 திட்டம்

- 13 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள 231 இடங்களில் கடலோர தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகளுடன் ஸ்வச் சாகர் சுரக்ஷித் சாகர் திட்டத்தின் ஐந்தாவது பதிப்பு 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 முதல் 19 ஆம் தேதி வரை நடைபெற்றது.
- இந்தப் பிரச்சாரத்தின் போது சுமார் 15 லட்சம் பேர் பெருங்கடல் பாதுகாப்பு உறுதிமொழியை ஏற்றனர்.
- இது நாடு தழுவிய தூய்மைப் பணிகள் மூலம் கடலோரத் தூய்மை மற்றும் கடல் பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.
- புதுடெல்லியில் நடைபெற்ற அறிவியல் அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தில் இந்த பிரச்சாரம் மதிப்பாய்வு செய்யப்பட்டது.
- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபை - தேசிய அறிவியல் தொடர்பு மற்றும் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தை (CSIR-NIScPR) முகமை நிறுவனமாகக் கொண்டு உத்தேசிக்கப்பட்டுள்ள அறிவியல் சாதனைகளுக்கான டிஜிட்டல் நூலகம் உருவாக்கப்பட்டு வருகிறது.




## சர்வதேசச் செய்திகள்

### L.69 குழு மற்றும் ஐ.நா. பாதுகாப்பு சபை சீர்திருத்தம்

- வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் (UNSC) சீர்திருத்தம் தொடர்பான L.69 ஆலோசனைக் கூட்டத்திற்கு செயின்ட் லூசியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஆல்வா பாப்டிஸ்டுடன் இணைந்து நியூயார்க்கில் தலைமை தாங்கினார்.
- L.69 குழுவானது ஆப்பிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா, கரீபியன் மற்றும் பசிபிக் பகுதிகளைச் சேர்ந்த சிறிய தீவு வளரும் நாடுகள் உட்பட 30-க்கும் மேற்பட்ட வளரும் நாடுகளை உள்ளடக்கிய ஒரு பிராந்தியங்களுக்கு இடையிலான கூட்டணியாகும்.
- பாதுகாப்புச் சபையை அதிகப் பிரதிநிதித்துவம் கொண்டதாகவும் பயனுள்ளதாகவும்

மாற்றுவதற்காக ஐ.நா. பாதுகாப்பு சபையின் விரிவான மற்றும் அவசர சீர்திருத்தத்திற்காக இது செயல்படுகிறது.

- C-10 (பத்து பேர் கொண்ட குழு) என்பது ஐ.நா. பாதுகாப்பு சபை சீர்திருத்தம் குறித்த பொதுவான ஆப்பிரிக்க நிலைப்பாட்டை ஊக்குவிக்கும் 10 நாடுகளை உள்ளடக்கிய ஆப்பிரிக்க ஒன்றியக் குழுவாகும்.
- தொடர்ச்சியான மோதல்கள் மற்றும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள ஐ.நா. பாதுகாப்பு சபையின் இயலாமை சீர்திருத்தத்தின் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறது என்று இந்தியா தெரிவித்துள்ளது.
- இந்தியா, L.69 மற்றும் C-10 ஆகியவை ஐ.நா. பாதுகாப்பு சபை சீர்திருத்தம் தொடர்பான தங்களது முயற்சிகளை தொடர்ந்து ஒருங்கிணைக்கின்றன; இந்தப் பிரச்சினையில் இந்தியா G4 (இந்தியா, பிரேசில், ஜெர்மனி மற்றும் ஜப்பான்) அமைப்புடனும் இணைந்து செயல்படுகிறது.




# முக்கிய தினங்கள்

## தேசிய மருந்து கண்காணிப்பு வாரம் 2026 - செப்டம்பர் 17/23




- மருந்துகளின் பாதுகாப்பான மற்றும் பகுத்தறிவுப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக 6-வது தேசிய மருந்து கண்காணிப்பு வாரம் (NPW) 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 17

முதல் 23 வரை அனுசரிக்கப்படும்.

- இது காசியாபாத்தில் உள்ள இந்திய மருந்து கண்காணிப்புத் திட்டத்திற்கான தேசிய ஒருங்கிணைப்பு மையத்தால் (NCC-PvPI) நடத்தப்படுகிறது மற்றும் இது உலக நோயாளிகள் பாதுகாப்பு தினத்துடன் (செப்டம்பர் 17) இணைந்து நடைபெறுகிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Promoting Rational Use of Medicines through Pharmacovigilance – A Step Towards Safer Healthcare" என்பதாகும்.
- மருந்து கண்காணிப்பு (Pharmacovigilance) மருத்துவப் தயாரிப்புகளுடன் தொடர்புடைய பாதகமான மருந்து எதிர்வினைகள் (ADRs) மற்றும் பிற பாதகமான நிகழ்வுகளைக் கண்டறிந்து புகாரளிப்பதில் கவனம் செலுத்துகிறது.
- இந்தப் பிரச்சாரம் 2021 ஆம் ஆண்டு முதல் இந்திய மருந்து கண்காணிப்புத் திட்டத்தின் (PvPI) கீழ் வழக்கமான தேசிய முன்னெடுப்பாக செயல்பட்டு வருகிறது.

# இதரச் செய்திகள்

## NIRF நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG) தரவரிசை 2025

- சமீபத்திய அதிகாரப்பூர்வ தேசிய நிறுவன தரவரிசைக் கட்டமைப்பு (NIRF) நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG) தரவரிசையில் சென்னை இந்தியத் தொழில் நுட்பக் கழகம் (ஐ.ஐ.டி மெட்ராஸ்) முதலிடத்தையும், அதைத் தொடர்ந்து இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் (IARI) மற்றும் ஜாமியா மில்லியா இஸ்லாமியா (JMI) ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.
- நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG) பிரிவு 2025 ஆம் ஆண்டு NIRFல் அறிமுகப் படுத்தப்பட்டது என்பதோடு இதன் மூலம் மொத்த தரவரிசைப் பிரிவுகளின் எண்ணிக்கை 16 இலிருந்து 17 ஆக அதிகரித்துள்ளது.
- இது ஆற்றல் திறன், நீர் மேலாண்மை, கழிவுகளை அகற்றுதல், SDG தொடர்பான ஆராய்ச்சி, சமூகச் செயல்பாடு மற்றும் சமூக உள்ளடக்கம் ஆகியவற்றை மதிப்பீடு செய்கிறது.
- ஐக்கிய நாடுகளின் 2030 திட்டத்தின் கீழ் உள்ள அனைத்து 17 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கும் (SDGs) நிறுவனங்களின் பங்களிப்பை இந்த தரவரிசை உள்ளடக்கியுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★